*Chapter XXII Code of Criminal Procedure.)*

*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 177/2023***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-1 (LW-1)***

*Name / Father's Name:* ***திரு.செந்தில்குமார் த/பெ. மதியழகன்***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **09.10.2025.**

துவக்க நேரம் 03.30 A.N

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது அரசநத்தம் கிராமத்தில் குடியிருந்து, டிரைவராக வேலை செய்து வருகிறேன். தேதி, மாதம் நினைவில்லை. கடந்த சுமார் 2 வருடங்களுக்கு முன்பு நான் கீழே விழுந்ததில் எனக்கு ஏற்பட்ட உள்ளடிக்கு ஆத்தூர், அரசு மருத்துவமனைக்கு சென்று நான் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். அப்பொழுது அங்கு வந்த மல்லியகரை காவல் நிலைய போலிசார், என்னை விசாரித்தபொழுது எதிரிகளின் மீது எனக்கிருந்த முன்விரோதம் காரணமாக அவர்களது பெயரை சொல்லி புகார் வாக்குமூலம் கொடுத்துவிட்டேன். நான் கொடுத்த புகார் வாக்குமூலத்தில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. அதில் கையெழுத்து மட்டும் நான் போட்டேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். **(புகார் வாக்குமூலத்தில் உள்ள புகார்தாரரின் கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள்.

**அரசுத்தரப்பு சாட்சி போலிசாரின் குவிமுச 161 விசாரணையின் போது கூறிய சங்கதிகளுக்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால், அரசுத்தரப்பில் பிறழ்சாட்சியாக கருதி சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

கடந்த 12.04.2023 ம் தேதி காலை 06.30 மணிக்கு எங்கள் ஊரைச்சேர்ந்த மூக்கன் என்பவர் வீட்டிற்கு முன்பு சென்று, மூக்கன் மனைவி சம்பூர்ணத்திடம் உன் மகன் எங்கள் வீட்டு முன்பு குடித்துவிட்டு, திட்டுகிறான் என்று சொன்னதற்கு, சம்பூர்ணம், என்னை கெட்ட வார்த்தையால் திட்டினார் என்றும், அன்று மாலை 04.00 மணியளவில் நானும், எனது மனைவியும் வண்டியில் சென்றுகொண்டிருந்தபொழுது, மூக்கன் குடிபோதையில் வந்து எங்களை வழிமறித்து, எங்களை கெட்ட வார்த்தையால் திட்டினார் என்றும், அவரது மகன் சிரஞ்சீவி அருகில் கிடந்த செங்கல்லை எடுத்து, எனது வலது பக்க தலை, இடது கன்னம், மூக்கு ஆகிய இடங்களில் அடித்தான் என்றும், மூக்கன் கல்லால், எனது முதுகில் அடித்தான் என்றும்  நான், போலிசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்பொழுது எதிரிகள் எனது ஊர்க்காரர்கள் என்பதால் எதிரிகளை இவ்வழக்கிலிருந்து காப்பாற்ற எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

முடிவு நேரம் 03.43 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2025.10.09 16:23:06 +0530

Judicial Magistrate No.2, Attur.

*Chapter XXII Code of Criminal Procedure.)*

*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 177/2023***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-2 (LW-2)***

*Name / Father's Name:* ***திருமதி.காந்திமதி க/பெ. செந்தில்குமார்***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **09.10.2025.**

துவக்க நேரம் 03.44 A.N

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது அரசநத்தம் கிராமத்தில் குடியிருந்து, டிரைவராக வேலை செய்து வருகிறேன். தேதி, மாதம் நினைவில்லை. இவ்வழக்கு சம்பவம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்யவில்லை.

**அரசுத்தரப்பு சாட்சி போலிசாரின் குவிமுச 161 விசாரணையின் போது கூறிய சங்கதிகளுக்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால், அரசுத்தரப்பில் பிறழ்சாட்சியாக கருதி சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

கடந்த 12.04.2023ம் தேதி காலை 06.30 மணிக்கு எங்கள் ஊரைச்சேர்ந்த மூக்கன் என்பவர் வீட்டிற்கு முன்பு எனது கணவர் சென்று, மூக்கன் மனைவி சம்பூர்ணத்திடம் உன் மகன் எங்கள் வீட்டு முன்பு குடித்துவிட்டு, திட்டுகிறான் என்று சொன்னதற்கு, சம்பூர்ணம், என் கணவரை கெட்ட வார்த்தையால் திட்டினார் என்றும், அன்று மாலை 04.00 மணியளவில் நானும், எனது கணவரும் வண்டியில் சென்றுகொண்டிருந்தபொழுது, மூக்கன் குடிபோதையில் வந்து எங்களை வழிமறித்து, எங்களை கெட்ட வார்த்தையால் திட்டினார் என்றும், அவரது மகன் சிரஞ்சீவி அருகில் கிடந்த செங்கல்லை எடுத்து, எனது

கணவரின் வலது பக்க தலை, இடது கன்னம், மூக்கு ஆகிய இடங்களில் அடித்தான் என்றும், மூக்கன் கல்லால், எனது கணவரின் முதுகில் அடித்தான் என்றும், அதனை நான் நேரில் பார்த்தேன் என்றும் போலிசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்பொழுது எதிரிகள் எனது ஊர்க்காரர்கள் என்பதால் எதிரிகளை இவ்வழக்கிலிருந்து காப்பாற்ற எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

முடிவு நேரம் 03.56 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2025.10.09 16:23:17 +0530

Judicial Magistrate No.2, Attur.